## பயிற்சி 1 (Sec.1 & 2-exercise-1)

**பனுவல்** 1

தமிழ்ப்பாடங்களைப் புத்தாக்கச் சிந்தனையுடன் மாணவர்களுக்குக் கற்பிக்கும் தமிழாசிரியர்களுக்கு 'நல்லாசிரியர் விருது' வழங்கப்படுகிறது. இவ்விருது கற்றல் கற்பித்தலில் தங்கள் முழு மனத்தையும் செலுத்தி மாணவர்களை வழிநடத்தும் ஆசிரியர்களை மேலும் ஊக்கப்படுத்தும். வயது, அனுபவம் என்று எதையும் பாராமல் மாணவர்களுக்குத் தமிழ்ப்பாடத்தை எவ்வாறு ஆர்மூட்டும் வகையில் கற்பிக்கிறார்கள் என்பதை மட்டுமே இந்த விருது நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்கள், முன்னாள் மாணவர்கள், பெற்றோர்கள், சக ஆசிரியர்கள் ஆகியோர் நல்லாசிரியர் விருதிற்காகத் தமிழாசிரியர்களை நியமனம் செய்யலாம்.

வினா 1 நல்லாசிரியர் விருது யாருக்காக வழங்கப்படுகிறது?

(A) புத்தாக்கச் சிந்தனையுள்ள ஆசிரியர்களுக்கு
(B) முழு மனத்துடன் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு
(C) ஆர்வமூட்டும் வகையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு
(D) தமிழ்ப்பாடம் கற்பிக்கும் தமிழாசிரியர்களுக்கு

( )

**பனுவல்** 2

காலத்தால் அழியாத கீதங்களை எளிய நடையில் இனிய தமிழில் நமக்கு அள்ளி வழங்கிய கவியரசு கண்ணதாசன் அவர்களை நினைவுகூர வந்துவிட்டது 'கண்ணதாசன் விழா' 2015. ஆண்டு தவறாமல் எழுத்தாளர் கழகம் ஏற்பாடு செய்யும் இவ்விழா வருகிற அக்டோபர் 30ஆம் தேதி, காலாங் சமூக மன்றத்தில் நடைபெற உள்ளது. இவ்விழாவை முன்னிட்டுப் பதிநான்கு வயதிற்கும் கீழுள்ள மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும், பதிநான்கு வயதற்கு மேலும் பதினெட்டு வயது கீழுள்ள மாணவர்களுக்கு மற்றொரு பிரிவாகவும் பாட்டுத்திறன் போட்டி நடத்தப்படும். இரு பிரிவுகளுக்குமான முதல் சுற்று வரும் 13ஆம் தேதி யீஷுன் டவுன் சமூக மன்றத்தில் நடைபெறும். மாபெரும் இறுதிச் சுற்று 'கண்ணதாசன் விழா' அன்று நடத்தப்படும். போட்டிக்காக விண்ணப்பிக்க வேண்டிய இணைய முகவரி www.kannadasanvizha.com. பதிவுசெய்யும் முதல் முப்பது பள்ளிகளுக்கு மட்டுமே வாய்ப்புண்டு.



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

வினா 2 கண்ணதாசன் விழா நடத்தப்படுவதன் நோக்கம் என்ன?

(A) மாணவர்களைக் கண்ணதாசன் பாடல்களைப் பாட வைப்பது
(B) பாட்டுப் போட்டியை இரு பிரிவுகளாக நடத்துவது
(C) கவியரசு கண்ணதாசனை மறவாமல் இருப்பது
(D) 30 பள்ளிகளுக்கு வாய்ப்பளிப்பது ( )

**பனுவல்** 3

நாம் பயன்படுத்தும் மஞ்சளில் ஏராளமான மருத்துவக் குணங்கள் உள்ளன. அது புற்றுநோயைக்கூட வராமல் தடுக்கும் என்று அண்மைய கண்டுபிடிப்பு ஒன்று கூறுகிறது. அக்காலத்தில் பெண்கள் மஞ்சளை மட்டுமே முகத்திற்குப் பூசிக்கொண்டார்கள். சோப்புகளையோ, முக ஒப்பனைகளையோ அவர்கள் முகத்திற்குத் தடவுவதில்லை. இது அவர்களின் முகத்திற்குத் தனி மினுமினுப்பையும், பொலிவையும் தந்தது. மஞ்சள் முகத்தில் இருக்கும் பருக்களைப் போக்கி, இயற்கை அழகைத் தந்ததால் பெண்கள் அதை அன்றாடம் பூசிக்கொள்வதை வழக்கமாக வைத்திருந்தனர். இன்று பெண்களுக்கிடையில் முகத்தில் மஞ்சள் பூசிக்கொள்ளும் பழக்கம் மங்கிவிட்டாலும் அவர்கள் இன்று பயன்படுத்தும் பெரும்பாலான முகப் பராமரிப்புப் பொருள்களில் மஞ்சள் சேர்க்கப்பட்டிருகிறது. இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் மஞ்சளின் பயனை நேரடியாகப் பெறமுடியாவிட்டாலும் ஓரளவு அவர்கள் பெறுகிறாகள்.

வினா 3 பெண்கள் அக்காலத்தில் மஞ்சள் பூசிக்கொள்ளக் காரணம் என்ன?

(A) அது பெண்களுக்கு இயற்கையான அழகைக் கொடுத்ததால்
(B) அவர்கள் சோப்பும் முக ஒப்பனைகளையும் பயன்படுத்தாததால்
(C) அதில் ஏராளமான மருத்துவக் குணங்கள் உள்ளதால்
(D) அதன் பயன் அவர்களுக்கு நேரடியாகக் கிடைத்ததால் ( )

**பனுவல்** 4

சத்தியம் செய்வது சிலருக்குச் சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுவது போல. எதற்கெடுத்தாலும் சத்தியம் செய்வார்கள். ஏதாவது தவறு செய்துவிட்டால் பாதிக்கப்பட்டவரிடம் ‘சத்தியமாக அடுத்த முறை இப்படிச் செய்யவே மாட்டேன்’ என்று கூறுவார்கள். ஆனால் மீண்டும் சில நாள்கள் கழித்து அதே தவற்றைச் செய்வார்கள்.



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

அந்த நேரத்தில் தப்பிக்கச் சத்தியத்தைக் கருவியாகப் பயன்படுத்துபவர்கள் இவர்கள். சத்தியம் என்பது உண்மை. அந்த உண்மையைத் தம் வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர் காந்தி. காந்தி தமது கல்லூரி படிப்பை முடித்துவிட்டுச் சட்டத்துறையில் பட்டம் பெற இங்கிலாந்து செல்ல நேர்ந்தது. வெளிநாடு சென்றால் கெட்டுப்போய்விடுவார்கள் என்ற பொதுவான நம்பிக்கையால் காந்தியின் தாயார் அவர் இங்கிலாந்து செல்ல அனுமதி தரவில்லை. அப்போது காந்தி தாம் வெளிநாடு சென்றாலும் மாமிசத்தைக் கையாலும் தொடமாட்டேன் என்று தாயாருக்குச் சத்தியம் செய்து கொடுத்தார். வெளிநாடு செல்ல அனுமதி பெற வேண்டுமே என்று சத்தியம் செய்யாமல் அச்சத்தியத்தைக் காப்பாற்றி தம் வாழ்நாள் முழுவதும் மாமிசம் உண்பதைத் தவிர்த்துவிட்டார் காந்தி.

வினா 4

சிலர் செய்த தவற்றிலிருந்து தப்பிக்க என்ன செய்வார்கள்?

(A) சில நாள்கள் கழித்து மீண்டும் அதே தவற்றைச் செய்வார்கள்
(B) சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுவார்கள்
(C) மீண்டும் அந்தத் தவற்றைச் செய்ய மாட்டேன் என்பார்கள்
(D) சத்தியத்தைக் கருவியாகப் பயன்படுத்துவார்கள்

( )

வினா 5

காந்தி தன் தாயாருக்குச் சத்தியம் செய்து கொடுக்கக் காரணம் என்ன?

(A) தாயார் காந்தியை நம்பாததால்
(B) வெளிநாட்டிற்குச் செல்பவர்கள் கெட்டுவிடுவார்கள் என்று தாயார் நினைத்ததால்
(C) காந்தி மாமிசம் சாப்பிட்டுவிடுவார் என்று தாயார் நினைத்ததால்
(D) காந்தி எப்படியாவது வெளிநாடு செல்ல அனுமதி பெற வேண்டும் என்று நினைத்ததால்

( )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

**பனுவல்** 5

கதிர் : அங்கே நிற்பது மல்லிகா ஆசிரியர் போல் தெரிகிறதே. ஆசிரியர் ஆசிரியர். . .

ஆசிரியர் : யாரது? கதிரா? நூலகத்திற்கு நூல்கள் இரவல் பெற வந்தாயா கதிர்?

கதிர் : ஆமாம் ஆசிரியர். அடுத்த வாரம் புத்தகத் திறனாய்வு ஒன்று சமர்பிக்க வேண்டும் என்று கூறினீர்கள் அல்லவா? அதற்காகத்தான் தமிழ்க் கதைப்புத்தகம் இரவல் பெற வந்தேன். நீங்களும் புத்தகம் இரவல் பெற வந்தீர்களா ஆசிரியர்?

ஆசிரியர்: இல்லை கதிர். நான் 1966ஆம் ஆண்டு வெளிவந்த செய்தித்தாளைப் படித்து அதிலிருந்து ஒரு தகவலைப் பெற வந்தேன்..

கதிர் : 1966ஆம் ஆண்டு வெளிவந்த செய்தித்தாளா? அவற்றையெல்லாம் இன்னும் வைத்திருப்பார்களா ஆசிரியர்? அல்லது இவ்வளவு ஆணடுகளுக்குப் பிறகும் அவை நல்ல நிலைமையில் இருக்குமா?

ஆசிரியர்: கதிர், நீ நூலகங்கள் வழங்கும் சேவைகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்று நான் நினைக்கிறேன்.

கதிர் : ஆமாம் ஆசிரியர். நீங்கள் புத்தகத் திறனாய்வு ஒப்படைப்புக் கொடுத்ததால்தான் நான் நூலகம் பக்கமே வந்தேன். நான் தொடக்கநிலை ஒன்றோ, இரண்டோ படிக்கும்போதுதான் கடைசியாக வந்ததாக ஞாபகம்.

ஆசிரியர்: இப்போது புத்தகங்கள் இரவல் பெறுவதைத் தவிர்த்துப் பழைய செய்தித்தாள்களையும் நாம் இப்போது ‘மைக்ரோ ஃபிலிம்’ எனப்படும் வடிவிலும் படிக்கலாம். நமக்குத் தேவையான ஆண்டின் ‘மைக்ரோ ஃபிலிம்மை எடுத்து, அதற்கு உண்டான கருவியில் போட்டுப் பார்த்து அதிலிருக்கும் செய்திகளை நாம் படிக்கலாம். தேவையானால் பிரதியும் எடுத்துக்கொள்ளலாம்.



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

கதிர் : கேட்கவே ஆச்சரியமாக இருக்கு ஆசிரியர்.

ஆசிரியர்: அதுமட்டுமல்ல கதிர். இப்போது நூலகங்கள் நமக்கு வீட்டிலிருந்தே புத்தகங்களை முன்பதிவுச் செய்யும் வசதி, மின்னூல்களைப் படிக்கும் வசதி போன்றவற்றையும் வழங்குகிறது. நூலகங்களில் இருக்கும் படிக்கும் அறைகளைக்கூட நாம் கணினி மூலம் முன்பதிவு செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். குழுவேலைகள் செய்வதற்கு இந்த இடவசதி மிகவும் பயனளிக்கும்.

கதிர் : அப்பா! நூலகத்தில் இவ்வளவு வசதிகளா! இத்தனை காலம் இவற்றை அறியாமல் அல்லவா இருந்துவிட்டேன். இந்தத் தகவல்களை எனக்கு அளித்ததற்கு மிக்க நன்றி ஆசிரியர். இனி நானும் நூலகங்களுக்கு அடிக்கடிச் சென்று அதன் சேவைகளைப் பயன்படித்திக்கொள்ளப் போகிறேன்.

ஆசிரியர்: மிக்க மகிழ்ச்சி கதிர். உன்னைப் போன்ற மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று அதன் பயன்களைப் பெற வேண்டும் என்பதே என் ஆசை. சரி கதிர், நான் வருகிறேன்.

கதிர் : சரி ஆசிரியர்.

வினா 6

ஆசிரியர் ஏன் நூலகத்திற்கு வந்தார்?

(A) புத்தகம் இரவல் பெற

(B) 1966ஆம் ஆண்டு வந்த செய்தித்தாளை வாசிக்க

(C) மைக்ரோ பிலிம்களைத் தேர்ந்தெடுக்க

(D) மைக்ரோ பிலிம்மூலம் செய்தித்தாளைப் பிரதி எடுக்க

( )

வினா 7

கதிர் நூலகம் வழங்கும் வசதிகளைப் பற்றி அறியாததன் காரணம் என்ன?

(A) அவன் ஆசிரியரை முன்பே நூலகத்தில் சந்திக்காததால்

(B) அவனுக்குப் புத்தகம் வாசிக்கும் பழக்கம் இல்லாததால்

(C) அவனுக்கு நூலகம் செல்லும் வழக்கம் இல்லாததால்

(D) நூலகத்தின் சேவைகளை அவன் பயன்படுத்திக்கொள்ளாததால்

( )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

**பனுவல்** 6

மன்னன் அக்பர் ஒருநாள் மிகுந்த கோபத்துடன் இருந்தார். அதனால் யாரைப் பார்த்தாலும் எரிந்து விழுந்தார். அந்த நேரம் பார்த்து வந்த அமைச்சர் பீர்பால், ''மன்னா, நீங்கள் ஏன் கோபமாக இருக்கிறீர்கள்,'' என்று வினவினார். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத அக்பர், ''அது என் இஷ்டம்,'' என்று பீர்பால்மீது பாய்ந்தார். ''இல்லை, கோபமாக இருக்கும்போது உங்கள் அழகிய முகம் விகாரமாகக் காட்சியளிக்கிறது. அதற்காகத்தான் சொன்னேன்,'' என்று குழைவுடன் கூறினார் பீர்பால். இது அக்பருக்கு மேலும் எரிச்சலூட்டியது.. ''என்னைப் பார்த்தா விகார முகம் கொண்டவன் என்கிறாய். என் கண்முன் நிற்காமல் இந்த ஊரைவிட்டே ஓடிவிடு,'' என்று சீறினார் அக்பர். அரச கட்டளையை மீற முடியததால் பீர்பாலும் அவ்வூரைவிட்டுச் சென்றுவிட்டார்.

மறுநாள் பீர்பால் இல்லாத அவையைக் கண்ட அக்பருக்கு என்னவோபோல் இருந்தது. ஏதோ கோபத்தில் பேசியதற்காக உண்மையாகவே போய்விட்டானே! என்று மனத்திற்குள் எண்ணி வருந்தினார். அக்பருக்கு ஒரு யோசனை தோன்றியது. இப்படிச் செய்தால் பீர்பால் நிச்சயம் கிடைத்துவிடுவார் என்ற நம்பிக்கை பிறந்தது. உடனே தன் ஏவலாளர்களைவிட்டு அறிக்கையொன்றைச் செய்ய சொன்னார். ''ஊர் மக்களுக்கு மன்னனிடமிருந்து ஓர் அறிவிப்பு. சுடும் கத்தரி வெயிலில் குடையில்லாமல் யார் கால்நடையாகவே என் மாளிகையைத் தேடி வருகிறாரோ அவருக்கு நூறு பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும் என்று மன்னனின் அறிவிப்பை வாசித்தான் ஏவலாளன். அறிவிப்பைக் கேட்ட ஏழை ஒருவன் தனக்கு இந்தப் பொற்காசுகள் கிடைத்தால் தன் வறுமை எல்லாம் தீர்ந்துவிடுமே என்று எண்ணினான். ஆனால் கொளுத்தும் வெயில் மண்டையைப் பிளந்துவிடுமே என்று எண்ணிக் கவலையாக இருந்தான். இதைக் கண்ட பீர்பால் ஏழையின் துன்பத்தைப் போக்க நினைத்தார். ''ஐயா, உங்களுக்குப் பொற்காசுகள் கிடைக்க நான் ஒரு வழி சொல்கிறேன் என்றார். குடைதானே எடுத்துச் செல்லக் கூடாது. ஒரு துணிமூட்டையைத் தலையில் சுமந்துச் செல்லுங்கள். வெயில் உங்கள் தலையைச் சுட்டெரிக்காது என்றார். ஏழையும் பீர்பால் சொன்னவாறே செய்தான். இப்படி யோசிக்க பீர்பால் ஒருவனால் மட்டுமே முடியும் என்று அக்பர் கூறி, ஏழைக்குப் பொற்காசுகளை வழங்கி, பீர்பாலை அழைத்து வரச்சொன்னார். பின் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு மீண்டும் அரண்மனைக்கு வரச் சொன்னார்.

வினா 8

அக்பர் பீர்பாலை ஊரைவிட்டே போகச் சொன்னதற்குக் காரணம் என்ன?

(A) அக்பர் அன்று எரிச்சலுடன் இருந்ததால்

(B) அக்பர் அன்று எல்லாரின் மீதும் எரிந்து விழுந்ததால்

(C) பீர்பால் அக்பரின் முகத்தைப் பார்ப்பதற்கு விகாரமாக இருக்கிறது என்றதால்

(D) பீர்பால் குழைவுடன் அக்பரிடம் பேசியதால் ( )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

வினா 9

அக்பர் தன் ஏவலாளர்களைவிட்டுச் செய்யச் சொன்ன அறிக்கையின் நோக்கம் என்ன?

(A) ஊர் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது

(B) வெயிலில் யாரையாவது தன் மாளிகைக்கு நடக்க வைக்க வேண்டும் என்பது

(C) பீர்பாலை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்பது

(D) ஏழையின் வறுமை நிலையைத் தீர்க்க வேண்டும் என்பது ( )

வினா 10 பீர்பால் ஏழைக்கு ஏன் உதவினார்?

(A) அப்போதுதான் அக்பர் தன்னைக் கண்டுகொள்வார் என்பதால்

(B) அப்போதுதான் அக்பரின் மாளிகைக்குத் திரும்பவும் செல்ல முடியும் என்பதால்

(C) அப்போதுதான் தனக்கு உதவியது பீர்பால் என்று ஏழை தெரிந்துகொள்வான் என்பதால்

(D) அப்போதுதான் ஏழையின் வறுமை நீங்கும் என்பதால்

( )

**பயிற்சி** 2 (Sec.1 & 2-Exercise-2)

**பனுவல்** 1

சிங்கப்பூர் தன் மக்களைப் மகிழ்ச்சியாக வைத்துள்ளது. இது பாதுகாப்பு நிறைந்த நாடு என்பதற்குப் பெயர்பெற்றுள்ளது. சுகாதாரத்திற்கு இங்குக் குறைவே இல்லை. எல்லா குடிமக்களுக்கும் போதுமான அடிப்படை வசதிகள் இருக்கின்றன. கட்டாயக் கல்வி எல்லாருக்கும் உண்டு. இவற்றை எல்லாம் சீரான இடைவெளிகளில் கண்காணித்து, தேவை ஏற்படின் சீரமைத்து மக்களின் நல்வாழ்விற்கு குறைவில்லாமல் கவனிப்பது நமது வளமான அரசாங்கமே ஆகும். அரசாங்கமே நாட்டின் முதுகெலும்பு. அது உறுதியாக இருக்கும்போது நாட்டு மக்கள் எவ்விதப் பிரச்சினையுமின்றி மகிழ்வுடன் இருப்பார்கள்.

வினா 1 சிங்கப்பூர் மக்களின் மகிழ்ச்சியான வாழ்விற்குக் காரணம் என்ன?

(A) நாட்டின் பாதுகாப்பு

(B) கட்டாயக் கல்வி

(C) அரசாங்கம்

(D) அடிப்படை வசதிகள்

( )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

**பனுவல்** 2

முடிகொட்டும் பிரச்சினையா? அல்லது மூட்டு வலியா? அடிக்கடி சோர்வு ஏற்படுகிறதா அல்லது சோம்பல் ஏற்படுகிறதா? அனைத்திற்கும் இன்றே வாருங்கள் 'நீலாஸ் ஆயுர்வேத நிலையம்'. கேரள மாநிலத்திலிருந்து வந்த கைதேர்ந்த மருத்துவர்கள் எல்லா உடல் பராமரிப்புப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கூறுகிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து மற்ற எல்லா நாள்களிலும் நிலையம் திறந்திருக்கும். மருத்துவ ஆலோசனை இலவசம். சிகிச்சைக்கு மட்டும் பணம் கட்டினால் போதுமானது. நிலையத்திற்கு வருவோர் முன்பதிவு செய்துகொள்வது அவசியம்!

வினா 2 'நீலாஸ் ஆயுர்வேத நிலையம்' எத்தகைய சேவையை வழங்குகிறது?

(A) முடி பராமரிப்புச் சேவை
(B) உடல் சோர்வைப் பராமரிக்கும் சேவை
(C) உடல் பராமரிப்புச் சேவை
(D) சோம்பலைக் கட்டுப்படுத்தும் சேவை

( )

**பனுவல்** 3

நம் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கும் ஆடைகளில் புடவைக்கு நிகர் வேறெதுவும் இல்லை என்றே கூற வேண்டும். திருமணம், பூப்பு நன்னீராட்டு விழா, வளைகாப்பு, புது மனை புகு விழா என எல்லா மங்கல நிகழ்வுகளிலும் புடவை இடம்பெறாமல் இருப்பதில்லை. பெண்ணின் அழகுக்கு அழகு சேர்ப்பது புடவையே ஆகும். புடவைகளில் பல ரகங்கள் இருக்கின்றன. தரத்திற்கும், வேலைப்பாடுகளுக்கும் ஏற்ப அவை விற்கப்படுகின்றன. புடவைகள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்தே இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்போது பெண்கள் புடவைகள் அணிவது குறைந்து வருகிறது என்றாலும் அதற்குள்ள மதிப்பு என்றும் குறையாது.

வினா 3 புடவைகள் நம் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் எவ்வாறு பிரதிபலிக்கின்றன?

(A) பெண்கள் அவற்றை அணிவதன் மூலம்
(B) அவை பல ரகங்களில் இருப்பதன் மூலம்
(C) அவை இந்தியாவிலிருந்து வருவதன் மூலம்
(D) அவை மங்கல நிகழ்வுகளில் இடம்பெறுவதன் மூலம்

( )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

**பனுவல்** 4

லலிதா : தாத்தா, நீங்கள் ஓய்வாக இருக்கிறீர்களா? நாங்கள் பள்ளியில் 'அறுபதுகளில் சிங்கப்பூர்' என்ற தலைப்பில் ஓர் ஒப்படைப்புச் செய்ய வேண்டும். அதற்காகச் சில தகவல்களை உங்களிடமிருந்து பெற வேண்டும்.

தாத்தா : நான் எப்போதும் ஓய்வாகத்தான் இருக்கிறேன் லலிதா. ஆமாம், உனக்கு என்ன தகவல்கள் தேவை? கேள், விடையளிக்க இந்தத் தாத்தா எப்போதும் தயார்.

லலிதா : தாத்தா, அக்காலத்தில் பள்ளி வாழ்க்கை எல்லாம் எப்படி இருந்தது? அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.

தாத்தா : அப்போது எல்லாம் பாலர் பள்ளிகள் கிடையாது. தொடக்கநிலை ஒன்றுதான் எங்கள் பள்ளி வாழ்க்கையின் ஆரம்பம். அப்போதிருந்த வகுப்பறைகளில் இப்போதிருக்கும் கணினி வசதி, குளிர்ச்சாதன வசதி எல்லாம் கிடையாது. ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் மணி ஒலிக்காது. இடைவேளை நேரம் மற்றும் பள்ளி தொடங்கும் நேரம், முடியும் நேரம் மட்டும் 'டொயிங் டொயிங்' என்று ஒருவர் மணி அடிப்பார். அதைக் கேட்டுத்தான் நாங்கள் இடைவேளை நேரம் வந்துவிட்டது என்று தெரிந்துகொள்வோம்.

லலிதா : அடடா, மிகவும் வித்தியாசமாக இருக்கிறதே! ஆமாம், பள்ளி உணவகம் எல்லாம் அப்போது எப்படி இருக்கும்? எங்கள் பள்ளியில் இருப்பதுபோல் நிறையக் கடைகள் இருக்குமா தாத்தா?

தாத்தா : நான் படித்த பள்ளியில் ஒரு சீன உணவுக்கடை, ஒரு மலாய் உணவுக்கடை, குளிர்ப்பான கடை, மிட்டாய்க்கடை என நான்கே கடைகள்தான் இருந்தன. அப்போது உணவுகள் எல்லாம் பத்துக் காசு, இருபது காசு என்றுதான் விற்கும். மீ வாங்கினால், சூப்பு இலவசமாகக் கிடைக்கும். எத்தனை முறை வேண்டுமானாலும் வாங்கிக் குடிக்கலாம். அதனால், அதற்கென்றே நாங்கள் வரிசைப்பிடித்து நிற்போம்.

லலிதா : கேட்கவே சுவாரசியமாக இருக்கு தாத்தா.



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

தாத்தா : அதுமட்டுமில்லை லலிதா. இடைவேளை முடிந்து பல் துலக்கும் பயிற்சி தொடக்கநிலை ஒன்று, இரண்டு படிக்கும் மாணவர்களுக்கு இடம்பெறும். பல் சுகாதாரம் எவ்வளவு முக்கியம் என்பதை மாணவர்களுக்கு அறிவுறுத்த, பல் துலக்கும் தூரிகைகளை எவ்வாறு சரியாகப் பயன்படுத்துவது என்று ஆசிரியர்கள் கற்றுக்கொடுப்பார்கள். அதன்மூலம் மாணவர்கள் பற்களை எப்படி முறையாகத் துலக்குவது என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள்.

லலிதா : இது மாணவர்களுக்கு நிச்சயம் பயன் அளித்திருக்கும். ஆனால் இப்போது அத்தகைய பயிற்சிகள் வழங்கப்படுவதில்லையே தாத்தா!

தாத்தா : இப்போது பெற்றோர்களே தங்களது பிள்ளைகளுக்கு வீட்டில் கற்றுக்கொடுப்பதால் மாணவர்களுக்குப் பள்ளியில் பல் துலக்கும் பயிற்சி வழங்கப்படுவதில்லை என்று நான் நினைக்கிறேன் லலிதா.

லலிதா : உண்மைத்தான் தாத்தா. தாத்தா, உங்களோடு பேசிக்கொண்டிந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. சிங்கப்பூரின் அக்காலப் பள்ளி வாழ்க்கையைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டேன். மிக்க நன்றி தாத்தா.

தாத்தா : அதற்கென்ன லலிதா. இன்னும் ஏதேனும் தகவல்கள் தேவைப்பட்டால் என்னிடம் கேள்.

லலிதா : சரி தாத்தா.

வினா 4 அக்காலப் பள்ளி உணவகங்களில் உணவு வகைகள் எவ்வாறு விற்கப்பட்டன?

(A) மிக மலிவாக விற்கப்பட்டன
(B) இலவசமாக விற்கப்பட்டன
(C) குறைவாக விற்கப்பட்டன
(D) நான்கு கடைகளில் விற்கப்பட்டன

( )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

வினா 5

பல் துலக்கும் பயிற்சியின் நோக்கம் என்ன?

(A) மாணவர்களுக்குப் பற்களைத் துலக்கக் கற்றுக்கொடுப்பது

(B) மாணவர்களுக்குப் பல் தூரிகைகளை முறையாககப் பயன்படுத்த கற்றுக்கொடுப்பது

(C) மாணவர்களுக்குப் பல் சுகாதாரத்தைப் பற்றிக் கற்றுக்கொடுப்பது

(D) மாணவர்களுக்கு உணவு உண்டபின் பல் துலக்கும் முக்கியத்துவத்தை கற்றுக்கொடுப்பது

( )

**பனுவல்** 5

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு. இது நட்பைப் பாராட்டி வள்ளுவர் பெருமான் இயற்றிய குறளாகும். நட்பைத் தவிர மனிதனுக்கு இருக்கும் எல்லா உறவுகளும் இரத்த சம்பந்தம்பட்டவை. எனவே அவற்றில் உறுதியும் அழுத்தமும் அதிகம். நட்பு என்பது இடையில் வருவது. இருப்பினும் எத்தகைய நட்பு துன்பம் நிகழும்போது களைந்த உடையை உடனே வந்து சரிபடுத்தும் கரம்போல் இருக்கிறதோ அத்தகைய நட்பு இரத்த பந்தத்திற்கு இணையாகும். சிலர் உறவினர்களைவிட நண்பர்களையே அதிகம் நாடுவார்கள். அது தவறன்று. அத்தகைய நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். சுயநலமற்றவர்கள். நட்பிற்காக தங்கள் உயிரையே விட்டவர்களின் கதைகள் நமது தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. தமது நண்பர் கோப்பெருஞ்சோழன் மாண்டுவிட்டார் என்றறிந்த புலவர் பிசிராந்தையார் அவ்விடத்திலேயே தானும் மாண்டார். இத்தனைக்கும் தமது நண்பரின் முகத்தைக்கூட அவர் பார்த்தது கிடையாது. இத்தகைய உயரிய நட்பு இக்காலத்திலும் இன்னும் இருக்கத்தான் செய்கிறது.

வினா 6

எவ்வித நட்பு இரத்தப் பந்தத்திற்கு இணையாகும்?

(A) உடை விலகும்போது உடனே சரிசெய்யும் நட்பு

(B) தக்க நேரத்தில் உதவும் நட்பு

(C) இடையில் வரும் நட்பு

(D) உறவினர்களைவிட சிறந்த நட்பு

( )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

வினா 7
பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் நட்பிலிருந்து நாம் அறிந்துகொள்வது என்ன?

(A) நட்பு உயிரினும் மேலாகப் போற்றப்பட வேண்டிய ஒன்று

(B) நட்பிற்காக நாம் உயிரை விட வேண்டும்

(C) அக்காலத்தில் புலவர்களும் மன்னர்களும் நல்ல நண்பர்களாக இருந்துள்ளனர்

(D) முகம் தெரியாதவர்களை நாம் நண்பர்களாக ஏற்றுக்கொள்ளக் கூடாது ( )

**பனுவல்** 6

திருடர்கள் நால்வர் ஒரு நாள் ஒரு செல்வந்தரிடம் பண மூட்டையைத் திருடிக்கொண்டு காட்டுப் பக்கம் வந்துகொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்குக் களைப்பு மிகுதியாக இருந்தது. ''நாம் இந்த மரத்தடியின் கீழே சற்று நேரம் படுத்துறங்கிவிட்டு மறுபடியும் நம் பயணத்தைத் தொடங்கலாமா?'' என்று முதல் திருடன் யோசனை கூறினான். மற்றவர்களையும் களைப்பு வாட்டியெடுத்ததால் அவனின் யோசனைக்கு அனைவரும் சம்மதித்தனர். ''எல்லாரும் தூங்கிவிட்டால் பணமூட்டைக்கு யார் காவல் இருப்பது,'' என்று இரண்டாவது திருடன் திடீரெனக் கேட்டான்.

''ஒருவர் காவல் இருக்க மற்றவர்கள் தூங்குவோம். பின் காவலிருப்பவர் மற்றொருவரை எழுப்பிக் காவலிருக்கச் சொல்லிவிட்டு அவர் தூங்கட்டும்.,'' என்று மூன்றாவது திருடன் கூறினான்.

''அய்யோ, இது நம் அனைவரின் தூக்கத்தையும் கெடுத்துவிடும். வேறு ஏதாவது யோசனை இருந்தால் சொல்லுங்கள்,'' என்றான் முதல் திருடன்.

''அதோ பாருங்கள். ஒரு குடிசை தெரிகிறது. அங்கே சென்று இந்தப் பண மூட்டையைப் பார்த்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு, நாம் ஓய்வெடுக்கலாம்,'' என்று அருகாமையில் ஒரு குடிசையைக் கண்ட முதல் திருடன் கூறினான். அவனின் யோசனைபடியே அனைவரும் குடிசையை நோக்கி நடந்தனர்.

குடிசைக்குள் ஒரு வயதான கிழவி மட்டுமே இருந்தாள். ''ஏய் கிழவி. நாங்கள் ஊருக்குப் புதிது. மிகவும் களைப்பாக இருப்பதால் நாங்கள் அதோ அந்த மரத்தடியில் சற்று ஓய்வெடுக்கப் போகிறோம். அதுவரையில் இந்த மூட்டையைப் பத்திரமாகப் பார்த்துக்கொள். நாங்கள் நான்கு பேரும் ஒன்றாக வந்து உன்னிடன் கேட்டால்தான் இந்த மூட்டையை எங்களிடம் திரும்பத் தர வேண்டும், என்ன புரிகிறதா? அதுவரையில் இதைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்,'' என்றார்கள் திருடர்கள். கிழவியும் சம்பதித்துப் பணமூட்டையை வாங்கிக் கொண்டாள்.

திருடர்கள் அசந்து மரத்தடியில் சற்று நேரம் ஆழ்ந்து தூங்கினர். ஆனால் அதில் முதல் திருடனுக்கு மட்டும் பண மூட்டையின்மீதே கண்ணாக இருந்தது. எப்படியாவது



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

தான்மட்டும் எல்லாப் பணத்தையும் அபகரிக்க எண்ணினான். அதற்காக ஒரு திட்டமும் தீட்டினான்.

''நண்பர்களே, எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. நான் அந்தக் கிழவியிடம் சென்று கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு வருகிறேன்,'' என்றான். அரைத்தூக்கத்தில் இருந்த மற்றவர்கள் ''ம்ம்'' என்றனர்.

கிழவியிடம் சென்ற திருடன் பண மூட்டையைத் தன்னிடம் கொடுக்கும்படிக் கிழவியிடம் கேட்டான். கிழவியோ நால்வரும் ஒன்றாக வந்தால்தான் பணமூட்டையைத் தர முடியும் என்று கட்டாயமாகச் சொல்லிவிட்டாள். இதைக் கேட்ட திருடன் தான் இருந்த இடத்திலிருந்தே, ''நண்பர்களே, கிழவியைக் கொடுக்கச் சொல்லுங்கள்,'' என்று கத்தினான். அவன் தண்ணீர்தான் கொடுக்கச் சொல்கிறான் என்று எண்ணிய மற்ற திருடர்கள் இருந்த இடத்திலிருந்தே கொடுக்கும்படி கையசைத்தனர்.

"கிழவி, எல்லாரும் சம்பதம் தெரிவித்துவிட்டனர். இப்போது அந்த மூட்டையை என்னிடம் கொடு,'' என்று திருடன் சாதூரியமாகக் கிழவியிடம் கேட்டுப் பண மூட்டையை வாங்கிக்கொண்டு அந்த இடத்தைவிட்டு ஓட்டம்பிடித்தான்.

மறுநாள் விடிந்ததும் மற்ற மூன்று திருடர்களும் முதல் வேளையாகக் கிழவியிடம் சென்று மூட்டையைக் கொடுக்கும்படிக் கட்டளையிட்டனர். கிழவி நடந்ததைக் கூறினாள். ஆத்திரமடைந்த திருடர்கள் அவ்வூரில் தீர்ப்புகளைத் திறம்படக் கூறும் மரியாதை ராமனிடம் கிழவி தங்களின் பண மூட்டையைத் திருடிவிட்டாள் என்று புகார் கொடுத்தனர். திருடர்களின் சூழ்ச்சியைப் புரிந்துகொண்ட மரியாதை ராமன், ''நான்கு பேராக வந்தால்தான் கிழவி மூட்டையைக் கொடுக்க வேண்டும் என்பது உங்கள் கட்டளை. அதன்படி நான்கு பேராக வாருங்கள். மூட்டை கிடைக்கும்,'' என்றார். திருடர்கள் இந்தத் தீர்ப்பை எதிர்பார்க்கவே இல்லை. கிழவி மரியாதை ராமனுக்கு நன்றி கூறி விடைபெற்றாள்.

வினா 8 திருடர்கள் பண மூட்டையைக் கிழவியிடம் கொடுக்கக் காரணம் என்ன?

(A) அவர்கள் காட்டு வழியில் நடந்து சென்றதால்
(B) பண மூட்டையைப் பார்த்துக்கொள்ள யாரும் முன்வராததால்
(C) அனைவருக்கும் மிகுந்த களைப்பாக இருந்ததால்
(D) அதைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள யாரும் இல்லாததால் (          )

வினா 9 கிழவி எப்போது முதல் திருடனிடம் மூட்டையைக் கொடுத்தாள்?

(A) திருடன் வந்து கேட்டபோது
(B) மற்ற திருடர்கள் கையசைத்தபோது
(C) மற்ற திருடர்கள் சம்பதம் தெரிவித்தபோது
(D) திருடன் தண்ணீர் குடிக்க வந்தபோது (          )



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd

வினா 10 மரியாதை ராமன் நான்கு பேராக வந்தால்தான் கிழவி மூட்டையைக் கொடுப்பாள் என்று ஏன் சொன்னார்?

(A) கிழவியைத் திருடர்களிடமிருந்து காப்பாற்ற
(B) திருடர்களுக்குப் பாடம் கற்றுக்கொடுக்க
(C) திருடர்களை ஏமாற்ற
(D) நான்காவது திருடனைக் கண்டுபிடிக்க ( )

**கேட்டல் கருத்தறிதல் – விடைகள்**

**பயிற்சி** 1 (Sec.1 & 2)

Q1 - C

Q2 - C

Q3 - A

Q4 - D

Q5 - B

Q6 - B

Q7 - C

Q8 - C

Q9 - C

Q10 - D

**பயிற்சி** 2 (Sec.1 & 2)

Q1 - C , Q2 - C

Q3 - D, Q4 - A

Q5 - C, Q6 - B

Q7 - A, Q8 - C

Q9 - C, Q10 - A



No rights to reproduce / copy. Copyrights of Wordsmith Education Group Pte Ltd